**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions
:Case No. C C No. 108 / 2024

**Deposition of witness for** Prosecution Defence Court P W 6

| | | |
|---|---|---|
| Name | : | சுரேஷ்குமார் |
| Father's Name | : | தேவராஜ் |
| Village | : | தம்பிரான்பட்டி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 45 |
| ACCUSED | | ரெங்கநாதன் – ஆஜர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2025.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தம்பிரான்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகின்றேன். புகார்தாரர் செந்தில்குமார் எனது உறவினர். அவர் தற்போது சிங்கப்பூரில் இருக்கின்றார். விபத்தில் இறந்து போன ராஜேந்திரன் எனது அண்ணன் ஆவார். செந்தில்குமார் மற்றும் ராஜேந்திரன் ஆகியோருக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தகவல் கிடைத்தது. செந்தில்குமாரும், ராஜேந்திரனும் செஞ்சேரியில் இருந்து தம்பிரான்பட்டிக்கு செல்லும் போது இருசக்கர வாகனத்தில் ரோட்டை கடக்கும் போது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. காயம்பட்ட இருவரும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், ராஜேந்திரன் திருச்சி நியூரோஒன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் எனக்கு தகவல் கிடைத்தது. விபத்து ஏற்பட்டு ஒரு வாரம் கழித்து ராஜேந்திரன் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டதாக எனக்கு

தகவல் கிடைத்தது. ராஜேந்திரன் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

பிரேத விசாரணை செய்த போது நான் போலீசாரிடம் கையெழுத்து செய்து கொடுத்தேன். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்ற விபரத்தை போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரேத விசாரணை நடந்த போது நான் மருத்துவமனையில் உடன் இல்லையென்றும், இறந்து போன நபர் எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**